# சேலம் மாவட்டம், காடையாம்பட்டி வட்டாரம்
# தாராபுரம் ஊராட்சி மன்ற தலைவர் அவர்களின் நடவடிக்கைகள்
# முன்னிலை – திருமதி.வசந்திகுருநாதன்,.

நாள்: 18 . 09. 2024

**பொருள்:** மனைப்பிரிவு – சேலம் மாவட்டம் – காடையாம்பட்டி வட்டாரம் – தாராபுரம் ஊராட்சி – தாராபுரம் வருவாய் கிராம ச.எண். **266/6B3A1** –ல் உள்ள598 ச.மீ பரப்பளவில் அமையும் குடியிருப்பு மனைப்பிரிவு வரன்முறை செய்து உத்தரவிடல் – சார்பு.

**பார்வை:**
1. அரசாணை எண்.79 வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சி துறை, நாள்.04.05.2017
2. அரசாணை எண்.18 வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சி (UDE4)த்துறை, நாள்.04.02.2019
3. அரசாணை எண்.18 வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சி (UDE3)த்துறை, நாள்.04.06.2004
4. உதவி இயங்குநர்,சேலம் மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம் சேலம்அவர்களின்ந.க.எண்.SLM/X84FCO34/27998/2024/TCP நாள்.21.08.2024
5. திரு.சீனிவாசகண்ணன், கதவு எண் 1/7A அரியாக்கவுண்டன்பட்டி சேலம் –636005 என்பவரது விண்ணப்பம் நாள்.18.9.2024

0–0–0

## உத்தரவு

பார்வை 4–ல் கண்ட உதவி இயக்குநர், சேலம் மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம், சேலம் அனுமதி கடிதத்தின்படி, சேலம் மாவட்டம், காடையாம்பட்டி வட்டத்திற்குட்பட்ட தாராபுரம் ஊராட்சியில் தாராபுரம் வருவாய் கிராம ச.எண். **266/6B3A1** –ல் அமையும் குடியிருப்பு மனைப்பிரிவுக்கு சேலம் மாவட்ட, நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர் அவர்களால் சில நிபந்தனைகளின்படி குடியிருப்பு மனை பிரிவிற்கான ம.வ / மோ எண். SWP/DTCP/SALEM/LAYOUT NO.183/2024 என்ற எண்ணிடப்பட்டு உத்தேச குடியிருப்பு மனைப்பிரிவிற்கான தொழில்நுட்ப ஒப்புதல் வழங்கப்பட்டு வரப்பெற்றுள்ளது.

மேலும், சேலம் மாவட்டம், காடையாம்பட்டி வட்டம், தாராபுரம் ஊராட்சி தாராபுரம் வருவாய் கிராம ச.எண். **266/6B3A1** –ல் உள்ள598 ச.மீ பரப்பளவில் பரப்பளவில் உள்ள நிலமானது சேலம் மாவட்ட நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர் அலுவலகத்தால் வகைப்படுத்தப்படாத (Unclassified Area) பகுதியில் அமைகிறது எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. உத்தேச மனைப் பிரிவிற்கான பரப்பு 598 ச.மீ

மேற்காணும் உத்தேச குடியிருப்பு மனைப்பிரிவு அமையும் இடத்திற்கு மனையிட தொழில்நுட்ப ஒப்புதல் அனுமதி வழங்கப்பட்டு சேலம் மாவட்ட நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர் அவர்களின் கடிதத்துடன் இணைத்து வரபெற்ற குடியிருப்பு மனைப்பிரிவு வரைபடம் முழுமையாக பரிசீலனை செய்யப்பட்டு பார்வை 1–ல் காணும் அரசாணையின்படி மேற்கண்ட இடத்திற்கு 3% மார்கெட் மதிப்பு

கட்டணம் செலுத்தப்பட வேண்டும். என தெரிவித்ததின்படி மனுதாரர் கீழ்கண்ட கணக்க தலைப்பில் பின்வருமாறு கட்டணம் செலுத்தியுள்ளார்.

**மனையிட ஒப்புதல் கட்டணம் = 6422 ச.அடிx ரூ-40. ச.அடி = 3/100 = 7706/-**

| | |
|---|---|
| 0217- Urban Development – 60 Other Urban Development Scheme – 800 other Receipts – AS Receipt under land use conversation – 27 Non Taxation fees – 09 Collections.<br>**D.P.C-02717-60-800-AS-22709** | சலான் மூலம் அரசு தலைப்பில் செலுத்தப்பட்டது.<br>சலான்/தேதி.20240918010398/18.9.2024 |

**வளர்ச்சி கட்டணம் தாராபுரம் ஊராட்சி அனுமதியற்ற மனைப்பிரிவு வரைமுறைப்படுத்தல் கணக்கில் ரூ.6000/- செலுத்தப்பட்டுள்ளது.தாராபுரம் ஊராட்சி சலான் நெ,2024-2025/7/16/16/7/10 நாள்.18.9.2024**

மேற்படி, காடையாம்பட்டி வட்டாரம், தாராபுரம் ஊராட்சி தாராபுரம் வருவாய் கிராம ச.எண். . **266/6B3A1** -ல் உள்ள598 ச.மீ பரப்பளவில் அமைந்துள்ள உள்ள இடத்திற்கு தாராபுரம் ஊராட்சி மன்றம், கீழ்கண்ட நிபந்தனைகளுக்குட்பட்டு **இச்சர்வே எண்ணில் அமையும் 6 மனைகளை வரன்முறை செய்து உத்தரவிடப்படுகிறது.**

**<u>நிர்ணயிக்கப்படும் நிபந்தனைகள்.</u>**

1. பார்வை 4-ல் காணும உதவி இயக்குநர், சேலம் மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம், சேலம் அவர்களின் உத்தேச மனையிட தொழிநுட்ப ஒப்புதல் கடிதத்தில் தெரிவித்துள்ள அனைத்து நிபந்தனைகளையும் பின்பற்ற வேண்டும்.
2. உத்தேச மனையிட தொழில்நுட்ப ஒப்புதல் வரைபடத்தில் உள்ள அளவு விபரங்களை இவ்வலுவலக அனுமதியின்றி மாற்றிமைக்க கூடாது.
3. ஒப்புதல் வழுங்கப்படும் மனையிடம் குடியிருப்பு வீடுகள் அமைப்பதற்கு மட்டும் அனுமதிக்கப்படுகிறது. அபாயகரமான மற்றும் அருவருக்கதக்க தொழிற்சாலை ஏதும் ஏற்படுத்த அனுமதியில்லை.
4. மனுதாரர் செலுத்தியுள்ள கட்டண விகிதங்களில் வேறுபாடுகள் ஏதுமிருந்து செலுத்த வேண்டி இருப்பது ஏதேனும் பின்னர் கண்டறியப்பட்டால் உரிய தொகையினை மனுதாரர் செலுத்த வேண்டும்
5. அரசின் கொள்கை அளவிலான மனை ஒப்புதலுல், அரசு மாற்றம் ஏதேனும் செய்து உத்தரவுகள் பிறப்பிக்கப்பட்டால், அந்த உத்தரவுகளுக்கு மனுதாரர் கட்டுப்பட்டவர் ஆவார்.
6. பத்திர பதிவு மற்றும் நில உரிமை தொடர்பாக ஏற்படுத்தப்படும் சிவில் மற்றும் இதர வழக்குகளுக்கு மனுதாரரே முழு பொறுப்பாவார்.
7. திறந்தவெளி இடத்திற்காக ஒதுக்கப்பட்ட நிலத்தின் வாயிலாக, மனுதாரரால் விற்பனை செய்யப்பட உள்ள மனை நிலங்களுக்கான உயர் அழுத்த / சாதாரன மின் அழுத்த மின்சார பாதை (லைன்) அமைத்து மின் வசதி செய்துகொள்ள அனுமதி இல்லை.

9. மேற்குறிப்பிட்ட நிபந்தனையை மீறினாலோ, மனுதாரரால் அளிக்கப்பட்ட விபரங்கள் சரியானவை அல்ல என்று ஏதேனும் பின்னர் காலங்களில் அறியப்பட்டாலோ அல்லது அரசு விதிமுறைகள் மீறப்பட்டாலோ இம்மனை ஒப்புதல் முன்னறிவிப்பு இன்றி இரத்து செய்ய ஏதுவாகும் என அறிவிக்கப்படுகிறது.

**இணைப்பு –1) வரைபடம்.**

**2) தொகை செலுத்தப்பட்ட சலான்நகல்கள்**

PRESIDENT
தலைவர்,
Dharapuram Panchayat,
தாராபுரம் ஊராட்சி,
Kadayampatti Union.

பெறுதல்

திரு.சீனிவாசகண்ணன்,
கதவு எண் 1/7A அரியாக்கவுண்டன்பட்டி
சேலம் –636005

நகல் –
உதவி இயக்குநர், சேலம் மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம், சேலம் அவர்களுக்கு

நகல் – சார் பதிவாளர் , ஓமலூர்.

நகல் – வட்டார வளர்ச்சி அலுவலர் (கி.ஊ), காடையாம்பட்டி.,